இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 09.06.2026

# 23 ஆம் புலிகேசி மந்திரிசபை!

“ஒரு கோமாளி அரண்மனைக்குப் போவதால் அவன் அரசன் ஆகி விட மாட்டான். அந்த அரண்மனைதான் சர்க்கஸ் கூடாரமாக மாறிவிடும்” என்ற பழமொழியைச் சொல்லி, **‘பதிமூன்றும் ஜோக்கராக வந்தால் என்ன செய்வது?’** என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். தினந்தோறும் நடப்பது காமெடி மட்டுமல்ல, டிராஜிடி.

★ சுற்றுச் சூழல் அமைச்சருக்கு தனது துறையே தெரியவில்லை. **‘சுற்றுலாத்துறை எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது’** என்றார். இரண்டு தடவை இதையே சொன்னதும் நிருபர்தான் திருத்துகிறார். உடனே அவர், **‘ரீ டேக் போகலாமா?’** என்றார். ரீல்ஸ் மந்திரி சபை தான் இது என்பதற்கு வேறு உதாரணம் வேண்டுமா?

★ அறநிலைய அமைச்சர் ரமேஷ் ஆய்வு என்ற பெயரால் முறுக்கு பொட்டலங்களை முகர்ந்து பார்க்கிறார். தயாரிப்பு தேதியைப் பார்த்து, **‘இது இந்த தேதியில் தான் தயாரிக்கப்பட்டதற்கு என்ன ஆதாரம்?’** என்று கேட்கிறார். முறுக்கு செய்யும் ஒவ்வொரு இடத்துக்கும் அதிகாரியை அனுப்பி அவர்கள் பார்த்த பிறகுதான் சீல் வைக்க வேண்டும் என்று சொல்லப் போகிறாரா ரமேஷ்?

★ குறிப்பிட்ட நேரத்துக்கு பேருந்து வரவில்லை என்ற ஆதங்கத்தில் ஒரு இளைஞர் கேட்கிறார். அதற்கு போக்குவரத்து துறை அமைச்சர் பார்த்திபன் சொன்ன பதில் என்ன தெரியுமா? **‘நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’** என்கிறார் பார்த்திபன். பஸ் வரலை என்பதற்கு இதுதான் பதிலா? ‘ நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’ என்பதையே பத்து தடவை சொல்கிறார் பார்த்திபன். நிலைமையின் மோசத்தை புரிந்து கொண்டு போலீஸ் அதிகாரி ஒருவர், அந்த இளைஞரை போகச் சொல்கிறார். அந்த இளைஞரை போகவிடாமல் தடுத்து நிறுத்தி, ‘நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’ என்கிறார் பார்த்திபன். அமைச்சர் இவர்.

★ விஜய்யின் சினிமா நண்பர் ஸ்ரீநாத் இப்போது அமைச்சர் ஆகிவிட்டார். அவரிடம் கச்சத்தீவு பற்றி கேட்கிறார்கள். அவருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பக்கத்தில் இருந்த இன்னொரு அமைச்சர் குமார், **‘நோ கமெண்ட்ஸ்... நோ கமெண்ட்ஸ்’** என்று அவர் காதில் ‘கத்தி’ச் சொல்கிறார். உடனே ஸ்ரீநாத்தும் **‘நோ கமெண்ட்... நோ கமெண்ட்ஸ்’** என்கிறார். நோ கமெண்ட்ஸ் என்று சொல்வதற்குத் தான் இவரை அமைச்சர் ஆக்கினார்களா?

★ இன்னொரு இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பற்றி கேட்கிறார்கள். **‘இப்போதைக்கு இதைப் பற்றி பேச வேண்டாமே’** என்கிறார் அமைச்சர் ஸ்ரீநாத். இவர் எப்போது பேசுவார் அமைச்சர் பதவி போன பிறகா?

★ இதைவிடக் கொடுமை தூத்துக்குடியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீநாத், திருச்செந்தூர் தொகுதிக்கு போய் நன்றி சொல்ல, **‘இது உங்க தொகுதி இல்லீங்க’** என்று அந்த மக்கள் மண்டையில் தட்டி அனுப்பி வைத்துள்ளார்கள்.

★ சூலூரில் 10 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்படும் கொடூரம் நடக்கிறது. அது பற்றி தொழில்துறை அமைச்சர் கீர்த்தனாவிடம் கேட்டால், **உடனே சிரிக்கிறார்.** ‘நடந்திருப்பது மிகப்பெரிய கொடுமை. இனி இது போல் நடக்கக்கூடாது’ என்றாவது சொல்ல வேண்டியதுதானே. சிரிக்கிறார். **‘இது மாதிரியெல்லாம் என்னிடம் கேட்கக் கூடாது’** என்கிறார்.

★ தனது துறையையாவது ஒழுங்காக கவனித்தாரா என்றால் அதுவும் இல்லை. தமிழ்நாட்டுக்கு **உலகத் தொழில் நிறுவனங்களை அழைக்க ரீல்ஸ் போடுகிறார்** தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா. இந்த ரீல்ஸை பார்த்துவிட்டு கம்பெனிகள் படையெடுத்து வருவார்கள்.

★ அனுபவம் வாய்ந்த செங்கோட்டையன் கூட தற்குறி கூட்டத்தில் சேர்ந்ததும் அதைப் போலவே ஆகிவிட்டார். சட்டம் ஒழுங்கைப் பற்றிக் கேள்வி எழுப்பினால், **“உங்க வீட்டுல எல்லாரும் நல்லாத் தானே இருக்காங்க... உங்க குழந்தைகளுக்கு ஏதும் பிரச்சினையா?”** என்று கேட்கிறார் செங்கோட்டையன். பாலியல் வன்கொடுமை எல்லா வீட்டிலும் வரிசையாக நடந்தால்தான் நடவடிக்கை எடுப்பாரா?

★ ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களை முதலமைச்சர் விஜய் மதிப்பதே இல்லை. அவர் கட்சி ஆரம்பித்தது முதல், முதலமைச்சர் ஆனது வரையிலும் அதன் பின்னரும் ஊடகங்களைச் சந்திக்கவே இல்லை. இது பற்றி கேட்டால் மின் துறை அமைச்சர் நிர்மல்குமார், **“செய்தியாளர்களைச் சந்தித்துத் தான் அரசு நடத்த வேண்டும் என்றெல்லாம் இல்லை. செய்தியாளர்களைச் சந்தித்தே ஆக வேண்டும் என்று பெஞ்ச் மார்க் வைக்காதீர்கள்”** என்று சொல்லி இருக்கிறார். அப்படியானால் இவர் எதற்கு செய்தியாளர்களைச் சந்திக்கிறார். வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியதுதானே? தலைமைச் செயலகத்தில் இருக்கும் செய்தியாளர் அறையை மூடிவிட வேண்டியதுதானே?

★ கூட்டுறவுத் துறை அமைச்சர் காந்திராஜனுக்கு, **‘ஆய்வு பண்றோம்’** என்பதற்கு மேல் எதுவும் சொல்லத் தெரியவில்லை. **‘சார் இதுக்கு மேல எதுவும் கேட்காதீங்க’** என்று கையெடுத்து கும்பிடுகிறார்.

★ **‘முதலமைச்சர் பற்றி எல்லாம் என்னிடம் கேட்காதீர்கள்’** என்று ஒரு அமைச்சர் சொல்கிறார். இவரிடம் கேட்காமல் யாரிடம் கேட்பது?

★ அமைச்சரவையில் இரண்டாவது இடம் என்று சொல்லப்படும் அமைச்சர் புஸ்சி ஆனந்த், எதைக் கேட்டாலும் கையெடுத்து கும்பிடுகிறார். **‘விஜய் சாரை இட்டுனு வந்து, இட்டுனு போறதே கஷ்டம்’** என்ற புகழ்பெற்ற பொன்மொழியால் புகழ் பெற்றவர் இவர்.

★ **‘முதல் போட்ட அமைச்சர்’** என்று ஊடகங்களால் அடையாளப்படுத்தப்படும் ஆதவ் அர்ஜுனா, கீரிக்கும் பாம்புக்கும் சண்டை விடுபவரைப் போல பேசிக் கொண்டே இருக்கிறார்.

★ **இவ்வளவு பேரும் இப்படி என்றால் முதலமைச்சர் விஜய்க்கு, தான் முதலமைச்சர் ஆகிவிட்டோம் என்ற நினைப்பே வரவில்லை. இன்னமும் தேர்தல் பரப்புரையைத்தான் செய்து கொண்டுள்ளார். பழைய பேச்சையே பேசி வருகிறார். ஒரு படத்தில் கவுண்டமணி கோட்டைச் சாமியாக நடிப்பார். தூக்கத்திலேயே எல்லா காரியத்தையும் தப்புத் தப்பாகச் செய்வார். அதைப் போல, ‘கோட்டைச்சாமி எந்திரி... இப்போ நீங்கதான் முதல் மந்திரி’ என்று யாராவது விஜய்யை எழுப்பி விடுங்கள்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை 6.6.2026அன்று அவரது இல்லத்தில் தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### த.வெ.க.வினர் கொள்கையை – லட்சியத்தை சொல்லி ஓட்டு கேட்டு வெற்றி பெற்றார்களா?

# உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. மாபெரும் வெற்றி பெறும்!

## புதுக்கோட்டையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூன் 9 -

இந்தியா கூட்டணியில் நாங்கள் இல்லை காங்கிரஸ் இருக்கும் கூட்டணியில் நாங்கள் இல்லை, இனிமேல் எந்த காலத்தில் முதுகில் குத்துவிட்டு ஓடியவர்களை சேர்க்க மாட்டோம் அவர்களோடு ஒட்டு உறவு கிடையாது. இனி கட்சி தொண்டன் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், காங்கிரஸ் எங்கு உள்ளதோ அந்த கூட்டணியுடன் நாங்கள் இருக்க மாட்டோம். ஓடிப்போன மனைவியோடு யாரும் வாழ மாட்டார்கள், எதிர்காலத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி செல்லும் வாய்ப்பு சத்தியமாக இல்லை. புதுக்கோட்டையில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

புதுக்கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புதுக்கோட்டையில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:

ஆதவ் அர்ஜுனா அரசியலில் ஒரு கள்ள லாரி, எத்தனை கட்சி மாறிவந்துள்ளார். பல்வேறு கட்சிகள் மாறி வந்து தற்போது தவெகவுக்கு தாவியுள்ளார். அவர் இந்த கட்சியில் எத்தனை நாள் தாக்குப்பிடிப்பார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தி.மு.க. - அ.தி.மு.க. இந்த இரண்டு கட்சிகளிலும் மாறுவது வேறு. ஆனால் பல கட்சிகள் மாறிவருபவர்கள் ஓரிடத்தில் நிலையாக நிற்க மாட்டார்கள்.

அதற்கு இன்றைய உதாரணம் ஆதவ் அர்ஜுனா, அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது போல், ஆதவ் அர்ஜுனாவிற்கு வாழ்வு வந்துள்ளது.

### ஆதவ் அர்ஜுனா புது துடைப்பம்!

லாட்டரி சீட்டில் பணம் சேர்த்து, எப்படி பணம் வந்தது என்று தெரியாமல், அந்த பணத்தை எப்படி செலவு செய்வது என்று தெரியாமல், கண்ணு மண்ணு தெரியாமல் தடித்த வார்த்தைகளை ஆதவ் அர்ஜுனா பயன்படுத்துகிறார். அவருக்கு தி.மு.க.வின் வரலாறு தெரியாது. 76 ஆண்டுகால தி.மு.க. வரலாற்றில் இவரைப் போன்ற பல பேரை நாங்கள் பார்த்துள்ளோம். ஆதவ் அர்ஜுனா போன்று பல பேர் இருந்தனர். அவர்களெல்லாம் இன்று இல்லை.



புது துடைப்பம் கொஞ்சம் வேகமாகத்தான் பெருக்கும் என்பார்கள். அதேபோல் ஆதவ் அர்ஜுனா ஒரு புது துடைப்பம்.

ரொம்ப வேகமாக பேசினால் மக்கள் அதற்கு திரும்ப பதில் அடி கொடுப்பார்கள் இதுதான் தமிழ்நாட்டின் வரலாறு. இதை ஆதவ் அர்ஜுனா புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்று உள்ளாட்சித் தேர்தலில் ஒரு இடத்தில் வர முடியுமா என்று ஆதவ் அர்ஜுனா சவால் விடுகிறார். அடிமடையனுக்கு கூட தெரியும் 1984 தேர்தல் குறித்து. தி.மு.க. தோன்றிய காலத்தில் இருந்து பல தோல்விகளையும் கண்டுள்ளோம். எங்களைப்போல வெற்றி பெற்றவர்களும் கிடையாது. 1957-ல் இருந்து இதுவரையில் தி.மு.க.வுக்கு என்று ஒரு தனிப்பட்ட செல்வாக்கு உள்ளது. அது எந்த காலத்திலும் குறைந்தது கிடையாது. இவ்வளவு பேர் அணி மாறுகிறார்களே..

தி.மு.க.வில் இருந்து யாராவது அணி மாறி உள்ளனரா? தி.மு.க. தொண்டர்கள் எங்கும் செல்ல மாட்டார்கள். த.வெ.க. கொள்கையைச் சொல்லி லட்சியத்தை சொல்லி ஓட்டு கேட்டு வெற்றி பெற்றார்களா?

யார் எம்.எல்.ஏ. என்று கூட தெரியாமல் விஜய்க்காக வாக்கு அளித்துள்ளனர். எம்.எல்.ஏ. பெயர், மந்திரி பெயர் கூட தொகுதி மக்களுக்கு தெரியாது?

லாட்டரி சீட்டு அடித்தது போல் ஒரு லக்கு தமிழக வெற்றிக் கழகத்திற்கு அடித்துள்ளது. அது கூட முழு மெஜாரிட்டி கிடையாது. இந்த தேர்தல் ஒரு விபத்து. உள்ளாட்சித் தேர்தலில் உள்ளூர் காரர்கள் யார் தகுதியானவர்களோ அவர்களுக்கு தான் மக்கள் வாக்களிப்பார்கள்,

இப்ப போட்ட வாக்குகள் எல்லாம் விஜய்க்காக வந்ததே தவிர வேறு யாருக்காகவும் கிடையாது.

இப்போது வந்துள்ள மந்திரிகள் எல்லாம் யோக்கியர்களா? விஜய் வீட்டிற்கு ரெய்டு செல்ல சென்றவர் மந்திரி ஆகி உள்ளார் என்றால் அது எப்படி என்று சாதாரண மக்களுக்கு கூட தெரியும். இதுதான் மிகப்பெரிய லஞ்சம். அன்று அவரை காப்பாற்றியதற்காக இன்று அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்துள்ளார். இப்படிப்பட்ட யோக்கியர்களை கையில் வைத்துக் கொண்டு, ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் எல்லாம் பேசினால் தி.மு.க .காரர்கள் பேசினால் அவர்கள் தாங்க மாட்டார்கள்.

மாணிக் தாகூர் எப்படி வெற்றி பெற்றார் என்று அவருக்கென்று ஒரு மனசாட்சி இருந்தால் முதலில் அவர் அதை சொல்லட்டும், அவர் வெற்றியை அவர் முதலில் ஆய்வு செய்யட்டும் அப்புறம் தி.மு.க. பற்றி பேசட்டும். ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு பதவிக்காக செல்பவர்கள் ரொம்ப நாள் நிற்க மாட்டார்கள். ஆட்சி திடீரென ஆறு மாதத்தில் கவிழ்ந்து விட்டால் மீண்டும் அதே கட்சிக்கு வந்து விடுவார்கள்.

ஆயாராம், சாயாராம் எல்லாம் தமிழ்நாட்டிற்கு தெரியாது. ஆனால் அதனை இப்போது போயிருப்பவர்கள் காட்டுகின்றனர்.

ஆனால் ஒன்று,

ஸ்டாலினுக்கோ, உதயநிதி ஸ்டாலினுக்கோ சவால் விடுகிற தகுதி ஆதவ் அர்ஜுனாவுக்கு இல்லை.

### ஓட்டுப் போட்ட மக்கள் புலம்புகிறார்கள்!

எம்.ஜி.ஆரை விட பெரிய தலைவர்கள் விஜயும் அல்ல மற்றவர்களும் அல்ல. ஆனால் 1984 தேர்தலுக்கு பின்னர் 1986 உள்ளாட்சி தேர்தலில் 102 நகராட்சியில் 90 நகராட்சியில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது.

ஆறு மாதத்தில் முடிந்தால் உள்ளாட்சித் தேர்தலை வையுங்கள், ஒரு மேயர் இடத்திலாவது தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றால் நான் ஒரு பக்க மீசையை எடுத்துக் கொள்கிறேன்.

### இந்த சவாலை ஏற்க தமிழக வெற்றிக் கழகம் தயாரா?

காரணம் தமிழ்நாடு மக்கள் அவர்களுக்கு வாக்களித்துவிட்டு இந்த ஒரு மாதமாக சொல்லுகின்றனர். தெரியாமல் வாக்களித்து விட்டோம் என்று.

எல்லோரும் பாலை ஊற்ற போகிறார்கள். நம்ம மட்டும் தண்ணி ஊத்துவோம் என்று நினைத்து எல்லோரும் தண்ணி ஊத்தி விட்டனர். அதில் தான் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த விசித்திரம் நீண்ட நாள் நீடிக்காது. எவ்வளவு சீக்கிரம் வந்ததோ அவ்வளவு சீக்கிரம் கீழே வந்து விடும்

விஜய்க்கு ஒரு ஆபத்து வரப்போகிறது என்றால் அதற்கு காரணம் ஆதவ் அர்ஜுனா தான்.

அண்ணாமலை எப்படி கட்சி ஆரம்பிக்கிறார்? யாரை எதிர்க்க போகிறார்? யாருக்கு பி பார் டியாக இருக்கப் போகிறார் யாருக்கு சி பார்டியாக இருக்க போகிறார் எந்த டீம்மாக இருக்கப் போகிறாய் என்பதை பார்த்து தான் சொல்ல முடியும்.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது என்று ப.சிதம்பரம் கூறியிருந்தாலும் நாங்கள் காங்கிரஸ் கூட்டணியை டைவர்ஸ் செய்து விட்டோம்.

சில கட்சிகள் எங்களை விட்டு சென்றவர்கள் எங்களுடைய ஆலோசனையோடு சென்று உள்ளனர். அது ஒரு வகையான டைவர்ஸ்.

ஆனால் காங்கிரஸ் உடன் செய்துள்ள டைவர்ஸ் வேறு வகையானது. (கள்ளத்தொடர்பு)

### கொள்கைக்காக இயங்கும் கட்சி தி.மு.க.!

இனிமேல் எந்த காலத்திலும் முதுகில் குத்துவிட்டு ஓடியவர்களை சேர்க்க மாட்டோம். அவர்களோடு ஒட்டு உறவு கிடையாது.

இனி கட்சி தொண்டன் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

காங்கிரஸ் எங்கு உள்ளதோ அந்தக் கூட்டணியுடன் நாங்கள் இருக்க மாட்டோம். ஓடிப்போன மனைவியோடு யாரும் வாழ மாட்டார்கள்.

எதிர்காலத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி செல்லும் வாய்ப்பு சத்தியமாக இல்லை.

துரை வைகோ தற்போது மாற்றிப் பேசுகிறார். இன்று மாலை கூறியுள்ளார் தி.மு.க.வில் தான் நீடிக்கிறோம் என்று கூறியுள்ளார்.

யார் தமிழக வெற்றிக் கழகம் பக்கம் போனாலும் நாங்கள் கவலைப்பட போவதில்லை.

ஜெயலலிதாவையே தோற்கடித்தவர்கள் நாங்கள். தி.மு.க. அரசியல் கட்சி அல்ல இலட்சியத்துக்காக கொள்கைக்காக இயங்கும் கட்சி. இதனை யாராலும் அழிக்க முடியாது.

நிர்மல் குமார் தற்போது அமைச்சர் இதற்கு முன்பாக அ.தி.மு.க.வின் செய்தி தொடர்பாளர். அடுத்து எந்த கட்சியில் இருக்கிறார் என்பதை பார்ப்போம். காலையில் ஒரு கட்சி மாலையில் ஒரு கட்சி லாரியில் ஏறிப் போகிறவர்கள் பற்றி எல்லாம் நான் பேச முடியாது.

இந்தியா கூட்டணியில் நாங்கள் இல்லை. காங்கிரஸ் இருக்கும் கூட்டணியில் நாங்கள் இல்லை.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

# போலீஸாரை மிரட்டிய த.வெ.க. பிரமுகர் - வீடியோ சமூக வலைதளங்களில் வைரல்!

*சென்னை, ஜூன் 9 -*

*சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நாய்கள் கருத்தடை மையம் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 1 மணி அளவில், அத்துமீறி இந்த மையத்துக்குள் நுழைந்த ஒருவர், அங்கிருந்தவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.*

*அவர் த.வெ.க. கட்சியின் சின்னம் பொறித்த டிசர்ட் அணிந்திருந்தார். மேலும், அதிகப்படியான மதுபோதையில் இருந்ததாக கூறப்படுகிறது.*

*அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸார், அந்த நபரை தடுத்து நிறுத்தி நள்ளிரவில் இங்கு ஏன் வந்தீர்கள் என விசாரித்தனர். இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர், போலீஸாரை ஒருமையில் பேசி மிரட்டல் விடுக்கத் தொடங்கினார். “என் பெயர் ரமேஷ் முத்துராமன். நான் ஒரு வழக்கறிஞர். என் தங்கச்சி ஜட்ஜ் ஆக இருக்கிறார். சென்னை மாநகரக் காவல் ஆணையர் அமல்ராஜை எனக்கு*

*பிறந்ததிலிருந்தே நன்றாகத் தெரியும். ஒரு வழக்கறிஞரையும், ஜட்ஜ் ஆகப்போறவனையும் அசிங்கப் படுத்துகிறீர்களா? நாயைக் காப்பாற்ற வக்கு இல்லாத போலீஸ் நீங்களெல்லாம். எங்கள் முதல்வர் விஜய் 25 நாய்கள் வளர்க்கிறார். என் கருப்புக் கோட்டின் மீது கை வைத்தால், அடுத்த நிமிடமே 10,000 வழக்கறிஞர்களை இங்கு வரவழைப்பேன்.*

*அப்புறம் நிலைமையே வேறு மாதிரி ஆகிவிடும்” என்று ஆவேசமாக கடும் மிரட்டல் விடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதுதொடர்பான வீடியோ, தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. இது, பொதுமக்கள் மற்றும் அரசியல் வட்டாரத்தில் பெரும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது.*